1979 பிப்ரவரி 20] [திரு. துரை முத்துசாமி]

கிறார்கள். குர்ணாம்சிங். கையெழுத்து போடாமலேயே எனக்கு கடிதம் வந்திருக்கிறது. அடுத்தபடியாக, கல்ராயன்மலையைப் பொறுத்தவரையில் அது ஒரு ஒன்றியமாக இருந்தது. இடைக் காலத்தில் அது நீக்கப்பட்டது. ஜாகீர்தாரரின் அடிமைகளாக இருந்துகொண்டிருந்தார்கள். அங்கு அந்த ஒன்றியத்தை மீண்டும் அமைக்கவேண்டும் என்று மக்கள் நீண்டநாட்களாக கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த குறையும் நீக்கப்படவில்லை. ஆகவே, வர இருக்கிற தேர்தலில் கல்ராயன்மலையிலும் தேர்தல் வைக்க வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கல்ராயன்மலையில் சமீப காலத்தில் மின்சார வசதி அளிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். இங்குள்ள மக்கள் விவசாயம் செய்வதற்காக மின் இணைப்பு கோரி தற்போது அப்ளிகேஷன்ஸ் கொடுத்து வருகிறார்கள். அவர்களுக்கு முறைப்படி கிடைக்கவேண்டுமென்றால் இன்னும் ஐந்து அல்லது பத்தாண்டுகளாகும். ஆகவே, அவர்களுக்கு மின்சாரம் வழங்குவதில் தனிச் சலுகை அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-00]

5. அறிவிப்பு

பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப் பட்ட முடிவின்படி, பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டபடி நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

21—2—1979—புதன்—	அமைச்சரவைமீது நம்பிக்கையின்மை தெரிவிக்கும் தீர்மானம் மற்றும் அரசின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானங்கள்மீது விவாதம்.
22—2—1979—வியாழன் 23—2—1979—வெள்ளி 24—2—1979—சனி	சட்ட முன்வடிவுகள் - ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுதல்.
25—2—1979—ஞாயிறு—விடுமுறை	
26—2—1979—திங்கள்—	அமைச்சரவைமீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும் அரசின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானங்களும் விவாதம்—கடைசி நாள்.

நாளை வினாக்கள்—விடைகள் இல்லை.

பேரவை 26—2—1979 அன்று ஒத்தி வைக்கப்பட்டு மீண்டும் 3—3—1979 அன்று கூடும்.

மேலும் 21—2—1979 அன்று பேசுகின்றவர்களுக்கு ஒதுக்கப் பட்டுள்ள நேரம்.

ஜனதா உறுப்பினர்	..15 நிமிடம்
அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்	60 நிமிடம்.
திரு. க. சுப்பு	..15 நிமிடம்
திரு. மு. ஆறுமுகம் (சேலம்)	..15 நிமிடம்
திரு. கே. கந்தசாமி	..15 நிமிடம்
திரு. ஆர். மார்க்கபந்து	..15 நிமிடம்
திரு. எஸ். அழகர்சாமி	..30 நிமிடம்
திரு. என். சங்கரய்யா	..30 நிமிடம்
திரு. ஏ. ஆர். மாரிமுத்து	. 30 நிமிடம்

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, உங்களுக்கு சௌகரிய மாக இருக்கும் என்பதற்காகச் சொல்லுகிறேன். எனக்குத் தரப் பட்டிருக்கும் 15 நிமிடத்தை எடுத்துவிடுங்கள். என் பெயரை அடித்துவிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழுவில் எல்லாத் தலைவர்களும் கூடி ஆலோசித்து எடுத்த முடிவுதான் இது.அதைத்தான் நான் அறிவித்தேன்.

(4) அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மையைத் தெரி விக்கும் தீர்மானம் மற்றும் கண்டனத் தீர்மானங்கள் மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. துரை முத்துசாமி : அடுத்து, மலை ஜாதி மக்கள் மேம்பாட்டு குழு போட்டிருப்பதாக 14-11-78— ல் முதலமைச்சர் அவர்கள் சார்பில் அமைக்கப்பட்டிருப்பதாகவும், நம்முடைய அரிசன நல துறை அமைச்சர் அவர்கள் இதன் உதவித் தலைவராகவும், என் போன்றவர்களை உறுப்பினர்களாக போட்டிருப்பதாகவும் அரசாங்க ஆணை வந்தது. இது இரண்டு மாதத்திற்கு ஒரு முறை கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இப்படி மலை ஜாதியினர் மேம்பாட்டுத் திட்டத்தை செயல் படுத்துவதற்காக 16-11-78-ல் போடப்பட்ட இந்த குழு இது வரையிலும் கூட்டப்படவில்லை. இனிமேலாவது மலை ஜாதி மக்கள் மீது கருணை காட்டி, அவர்களுக்காக என்னென்ன திட்டங்கள் போடப்படுகிறது என்பதையெல்லாம் தெரிந்து கொள்கின்ற வகையில் அமைக்கப்பட்ட குழு கூட்டப்பட வேண்டும். இதுவரை இந்தக் குழுவை கூட்ட முடியவில்லை என்று சொன்னால் இந்த அரசினுடைய நிர்வாகம் எந்த அளவுக்கு சீர்கேடு அடைந்திருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.